Diploma Programme
Programme du diplôme
Programa del Diploma

# Tamil B – Standard level – Paper 2
# Tamoul B – Niveau moyen – Épreuve 2
# Tamil B – Nivel medio – Prueba 2

Tuesday 6 November 2018 (morning)
Mardi 6 novembre 2018 (matin)
Martes 6 de noviembre de 2018 (mañana)

1 h 30 m

---

**Instructions to candidates**

- Do not turn over this examination paper until instructed to do so.
- Choose one task. Each task is worth **[25 marks]**.
- The maximum mark for this examination paper is **[25 marks]**.

**Instructions destinées aux candidats**

- Ne retournez pas cette épreuve avant d'y être autorisé(e).
- Choisissez une tâche. Chaque tâche vaut **[25 points]**.
- Le nombre maximum de points pour cette épreuve d'examen est de **[25 points]**.

**Instrucciones para los alumnos**

- No dé la vuelta al examen hasta que se lo autoricen.
- Elija una tarea. Cada tarea vale **[25 puntos]**.
- La puntuación máxima para esta prueba de examen es **[25 puntos]**.



8818 – 2332

© International Baccalaureate Organization 2018

International Baccalaureate
Baccalauréat International
Bachillerato Internacional

https://xtremepape.rs/

பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்றினைப்**பற்றி 250 சொற்களுக்குக் குறையாமலும் 400 சொற்களுக்கு மிகாமலும் விடை எழுதுக.

**1. பண்பாட்டு வேற்றுமை**

எதிர்வரும் பள்ளிப் பொதுப் பார்வையிடும் நாளை முன்னிட்டுப் பள்ளியில் சேர விரும்பும் மாணவர்களிடமும் அவர்தம் பெற்றோரிடமும் பள்ளி குறித்து அறிமுகப்படுத்துமாறு பணிக்கப்பட்டிருக்கிறாய். உன் உரை பல்லினப் பண்பாட்டுச் சமூகமாக விளங்கும் உன் பள்ளி குறித்துக் கேட்போர் ரசிக்கும்படியாக இருக்க வேண்டுமெனப் பள்ளி முதல்வர் கேட்டுள்ளார். அந்த உரையின் சாரத்தை எழுதுக.

**2. மரபும் பழக்கவழக்கங்களும்**

அண்மையில் ஒரு தேசிய சஞ்சிகையில் ஒரு செய்திக் கட்டுரையைப் படித்தாய். அதில் அந்தக் கட்டுரையாசிரியர் நவநாகரிக உடையலங்காரம் இளையர் மீது எதிர்மறையான தாக்கத்தை விளைப்பதாகக் கூறியிருந்தார். இது குறித்து உன் எண்ணங்களையும் விளக்கிச் சஞ்சிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதுக.

**3. உடல்நலம்**

ஆரோக்கியமான வாழ்க்கைமுறையைப் பின்பற்ற வேண்டுமெனப் புத்தாண்டுத் தீர்மானங்களை நாம் மேற்கொள்வதுண்டு. ஆனால், பல்வேறு காரணங்களினால் பலரும் அவற்றை நிறைவேற்றுவதில்லை. ஆனால், நீ உன் தீர்மானங்களை வெற்றிகரமாய்ச் செயற்படுத்தி வருவதோடு மற்றவர்களுக்கு உதவவும் எண்ணுகிறாய். வெற்றி பெறுவதற்கு நீ மேற்கொண்ட முயற்சிகளை விளக்கி உன் வலைப்பக்கப் பதிவை எழுதுக.

**4. பொழுதுபோக்கு**

“மிதிவண்டிகளுக்கும் நகரத்தில் நடமாடும் உரிமை உண்டு” என்னும் இயக்கத்தை நீயும் உன் வகுப்பும் ஏற்பாடு செய்கிறீர்கள். இந்த இயக்கத்தைக் குறித்த தகவலையும் அதன் நோக்கங்களையும் குறித்து ஒரு சுற்றறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பை நீ ஏற்றுள்ளாய். அந்தச் சுற்றறிக்கைக்குத் தேவையான விவரத்தை எழுதுக.

https://xtremepape.rs/

**5. அறிவியலும் தொழில்நுட்பமும்**

உன் பள்ளியில் ஒரு புது மாணவர் தொலைதூரக் கல்வித்திட்டத்தின்வழி அயல்நாட்டு மொழியைக் கற்றுள்ளார். உன் பள்ளிச் செய்தித்தாள் நிருபர் என்னும் நிலையில், அம்மாணவரின் மொழி கற்றல் அனுபவத்தை அறிய அவரை நேர்காணல் காண்கிறாய். அந்த நேர்காணலின் அடிப்படையில் ஓர் அறிக்கையை எழுதுக.

---

https://xtremepape.rs/